பக்கங்கள் 24+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 06 வியாழக்கிழமை 20.03.2025 | அதிர்வு 229

## வேட்புமனு நிராகரிக்கப்பட்ட தரப்புக்களின் விவரங்கள்

(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று மதியம் முடிவடைந்ததை அடுத்து வேட்புமனுக்களை சரி பார்க்கும் பணி மாவட்ட 03▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்

## வெளிவந்தது உத்தியோகபூர்வ அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

336 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்கள் இன்று நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் பின்னரே தேர்தல் திகதி தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க வெளியிட்டுள்ளார். 02▶

# மிருசுவில் கொலையாளிக்கு மன்னிப்பா? ஆட்சேபிக்கும் வழக்கு விசாரணை முடிவு

### இராணுவ சார்ஜண்ட் சுனில் ரத்னாயகாவுக்கு தீர்ப்பு வரை பயணத் தடை

யாழ்ப்பாணம், மிருசுவிலில் எட்டுத் தமிழர்களின் கழுத்தை அறுத்துப் படுகொலை செய்த வழக்கில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் சுனில் ரத்னாயக்க என்ற ஸ்டாவ் சார்ஜண்டுக்கு ஜனாதிபதி கோட்டா



பய ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையை இன்று உயர்நீதிமன்றம் பூர்த்தி செய்தது. தீர்ப்பு அறிவிக்கப்படும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. 02▶

## தேசபந்து தென்னக்கோனுக்கு இரு வாரங்கள் விளக்கமறியல்

பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை - இரு வாரங்களுக்கு - விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு 02▶



## தமிழரசுக்கு எதிரான சிவமோகனின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு!

### இடைக்காலக் கட்டாணை வழங்க மறுப்பு

தம்மைக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக இடைக்காலக் கட்டாணை ஒன்று வழங்கும்படி கோரி 03▶



# நேர்மையான புதிய கூட்டு காலத்தின் கட்டாய தேவை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான புதிய அரசியல் கூட்டின் தலைவர்கள் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பல்வேறு அரசியல் கட்சிகள் இணைந்து புதிய அரசியல் கூட்டொன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளும் தனித் தனியாகவும் அதேநேரம் புதிய கூட்டுக்களை அமைத்தும் போட்டியிடுகின்றன.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் இணைந்து புதிய கூட்டொன்றை உருவாக்கியுள்ளன.

இந்தப் புதிய கூட்டானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கில் சின்னத்தில் வடக்கு, கிழக்கு முழுவதும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்தக் கூட்டில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகத் தமிழரசு, தமிழ் மக்கள் கூட்டணியில் இருந்து பிரிந்த அருந்தவபாலன் அணி ஆகிய தரப்புக்கள் அங்கம் வகிக்கின்றன.

மேற்படி கட்சிகள் இணைந்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளன.

இந்தப் புதிய கூட்டு உருவாக்கம் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மேற்படி கட்சிகள் யாழ்ப்பாணத்தில் இன்று ஊடக சந்திப்பை நடத்தியுள்ளன.

இதன்போது நேர்மையான புதிய கூட்டு காலத்தின் கட்டாய தேவை என்று மேற்படி கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தேசபந்து...**

இன்று வியாழக்கிழமை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து இந்த உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு வெலிகமவில் ஒரு ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யுமாறு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த தேசபந்து தென்னக்கோன், நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இது தொடர்பான விடயங்களைப் பரிசீலித்த பின்னர், பிணை வழங்குவதா, இல்லையா என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படும் என கூறி, பொலிஸ்மா அதிபரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து, தேசபந்து தென்னக்கோன் நேற்றுப் பிற்பகல் விசேட பாதுகாப்பின் கீழ் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மிருசுவில்...**

அதுவரையில் ஸ்டாவ் சார்ஜண்ட் சுனில் ரத்னாயக்க நாட்டை விட்டு வெளியேறத் தடை விதித்த உயர் நீதிமன்றம், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டது.

நீதியரசர்கள் யஸந்த கோத்தாகொட, மஹிந்த சமயவர்த்தன, அர்ஜுன ஒபயசேகர ஆகியோரைக் கொண்ட ஆயமே இன்று இந்த வழக்கு விசாரணையைப் பூர்த்தி செய்து தீர்ப்பு அறிவிப்பதை ஒத்தி வைத்தது.

அப்பாவி பொதுமக்கள் எண்மர் இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் கோரமாகக் கொல்லப்பட்ட வழக்கு 'ட்ரயல் அட் பார' முறைமையில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட போது சுனில் ரத்னாயக்கவுக்கு மரண தண்டனை விதிக்கும் தீர்ப்பு ஏகமனதாக வழங்கப்பட்டது. ஏனைய 4 இராணுவத்தினரும் போதிய ஆதாரமில்லாமல் விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட மேல்முறையீட்டை விசாரணை செய்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம், 'ட்ரயல் அட் பார' நீதிமன்ற தீர்ப்பை முழுமையாக ஏற்று அங்கீகரித்திருந்தது.

2015 ஜுன் 25ஆம் திகதி 'ட்ரயல் அட் பார' மன்றின் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால்,2021 மார்ச் மாதத்தில் சுனில் ரத்னாயக்கவுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தார் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக அடுத்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது இப்போது தீர்ப்பு வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஐந்து மனுக்களில் ஒன்று கொல்லப்பட்டவர்களின் ஒருவரின் மகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் அந்த மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டு இருந்தார்.

அதேபோல் மனித உரிமைவாதி அம்பிகா சற்குணநாதன் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் ஆகிய வற்றின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் சார்பிலும் சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டு இருந்தார்.

இவற்றைத் தவிர மேலும் இரண்டு அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் இந்த விடயங்களை ஒட்டி தாக்கல் செய்யப்பட்டிருந்தன. உயிரிழந்த ஒருவரின் உறவினர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஜிப்ரி அழகரட்ணம் முன்னிலையாகி வாதிட்டிருந்தார்.

**மே மாதம்...**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் வேட்புமனு கோரப்பட்ட போதிலும் கடந்த அரசு தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை வழங்காமையின் காரணமாகத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நிதி கிடைக்கப் பெற்றுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழில் வேட்புமனுத் தாக்கல்

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இன்று யாழ்ப் பாணத்தில் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு தமிழரசுக் கட்சி இன்று வேட்புமனுத் தாக்கல்

(கி.வசந்தன்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குப் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சி வவுனியாவில் இன்று தாக்கல் செய்தது.

வேட்புமனுவை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையிலான குழு கையளித்தது.



வவுனியா மாநகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் நேற்று தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழரசுக்கு...**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ்.சிவமோகன் தாக்கல் செய்த மனுவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

நீதிபதி சதீஸ்வரன் இந்தத் தீர்ப்பை இன்று வழங்கினார்.

எனினும், கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக சிவமோகன் தாக்கல் செய்த மூல வழக்கு தொடர்ந்தும் விசாரணையில் இருக்கும். இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கையே இப்போது நிராகரிக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த வழக்கின் முதல் மூன்று எதிராளிகளான கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இதுவரை காலமும் செயலாளராகக் கடமையாற்றிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் எம்.பி., கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் இவ்வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டிருந்தார்.

நான்காவது எதிராளியாக இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த சி.சிறீதரன் எம்.பி. வழக்காளியான மருத்துவர் சிவமோகனுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்து பதில் மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி குருபரன் முன்னிலையாகி வாதிட்டு இருந்தார்.

**வேட்புமனு...**

தேர்தல் செயலகங்களில் நடைபெற்று வருகின்றது.

அதன்படி சில தரப்புக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் சாத்தியம் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் இடங்கள் மற்றும் தரப்புக்களின் விவரம் தொடர்பாக முற்கூட்டி கிடைத்த தகவல்கள் வருமாறு:-

**கிளிநொச்சி மாவட்டம்**

☛ கரைச்சி பிரதேச சபையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜீவராஜா தலைமையிலான சுயேச்சைக் குழு உட்பட 3 சுயேச்சைக் குழுக்கள்.

☛ பச்சிலைப்பள்ளியில் ஒரு சுயேச்சைக் குழு

**மன்னார் மாவட்டம்**

☛ மாந்தை மேற்கு பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி, காதர் மஸ்தானின் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஒரு கட்சியும் ஒரு சுயேச்சைக் குழுவும்

☛ முசலி பிரதேச சபையில் ஒரு முஸ்லிம் கட்சி.

☛ மன்னார் நகர சபையில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி.

**முல்லைத்தீவு மாவட்டம்**

☛ கரைத்துறைப்பற்று பிரதேச சபையில் இரண்டு சிங்கள கட்சிகள்.

☛ புதுகுடியிருப்பு பிரதேச சபையில் இரண்டு சுயேச்சைக் குழுக்கள்

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

☛ மருத்துவர் அர்ச்சனாவின் சுயேச்சைக் குழு யாழ். மாநகர சபை, வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை.

☛ வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்கு ஒரே நபர் வேட்பாளராக இரண்டு கட்சிகளில் - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் பட்டியலில் பெயர் போடப்பட்டுள்ளார். ஆகையினால், இவற்றில் ஒன்று நிராகரிக்கப்படும் சூழல் தென்படுகிறது.

**வவுனியா மாவட்டம்**


☛ வவுனியா தெற்கு பிரதேச சபையில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஒரு சுயேச்சை

☛ வவுனியா மாநகர சபையில் ஒரு சிங்களக் கட்சி.

☛ வவுனியா வடக்கு பிரதேச சபையில் இரண்டு சுயேச்சைக் குழுக்கள்.

# வவுனியாவில் தமிழ்ச் சபைகளுக்கும் தனிச் சிங்களத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனுப் பத்திரம் தாக்கல்!





(வவுனியா நிருபர்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனுப் பத்திரங்கள் தமிழ் உள்ளூராட்சி சபைகளுக்கும் தனிச் சிங்களத்தில் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகப் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையளிக்கும் பணி இன்று நண்பகல் வரை இடம்பெற்றது.

இந்தநிலையில் ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூ



ராட்சி சபைகளுக்குமான வேட்புமனுக்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தலைமையில் இன்று தாக்கல் செய்தது.

இந்த வேட்புமனுப் பத்திரங்கள் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை எனத் தமிழ்ச் சபைகள் அனைத்தினதும் விண்ணப்பம் சிங்கள மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழ் மக்கள் வாக்களித்துத் தெரிவு செய்திருந்த போதும் அனைத்து சபைகளினதும் வேட்புமனுக்கள் சிங்கள மொழியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்புமனு

(கி.வசந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை ஐக்கிய மக்கள் சக்தி இன்று தாக்கல் செய்தது

வவுனியா மாநகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா சிங்கள பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இந்த வேட்புமனுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் முத்து முகமது மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி தலைமையிலான குழுவினர் கையளித்திருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை போட்டியிடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





# யாழில் தேசிய மக்கள் சக்தி வேட்புமனு



(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தது.

இன்று முற்பகல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில், யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் தேசிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா மற்றும் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பால்மா விலை அதிகரிப்பு

ஏப்ரல் முதலாம் திகதி ‘ஏப்ரல் பூல்’ தினம். ஏப்ரல் முட்டாள் தினம்.

இந்தத் தடவையும் ஏப்ரல் முட்டாள் தினத்தில் நாட்டு மக்களை முட்டாள்களாக்கும் நடவடிக்கை கட்டவிழாமல் இருக்கப் போவதில்லை.

விலைவாசியைக் குறைப்போம், மக்களுக்கு சொகுசான வாழ்க்கையைத் தேடித் தருவோம் என்று ஆசை வார்த்தைகள் காட்டி, அதிகாரத்துக்கு வந்த புதிய அரசின் காலத்திலும் அந்த வாக்குறுதிகளுக்கு மாறாக மக்களை முட்டாள்களாக்கும் நடவடிக்கை ஏப்ரல் முதலாம் திகதி - ஏப்ரல் முட்டாள் நடவடிக்கை - இம்முறையும் இடம் பெற உள்ளது.

இந்த முறை அந்தத் தினத்தில் மக்களின் மிக அத்தியாவசியமான பாவனைப் பொருள்களில் ஒன்றான பால்மாமீது கைவைக்கப்படுகின்றது.

பால்மா இறக்குமதியாளர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் பால்மா விலையை 4.7 வீதம்அதிகரிக்கத்தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கெட்டின் விலை சுமார் 50 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த அதிகரிப்பின் பிரகாரம் இனி 400 கிராம் பால் மா பக்கெட்டின் புதிய விலை ஆயிரத்து நூறு ரூபாவாகும்.

அரிசி, கோதுமை மா, பால் மா, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு வெறுமனே அப்பொருள்களின் விலைகள் கூடுவதோடு அடங்கி விடுவதில்லை. தொடர் நடவடிக்கையாக அவை பல விலை அதிகரிப்புகளை விலைச் சங்கிலிக் கட்டமைப்பில் கொண்டு வந்து சேர்க்கும். அது அனுபவப் பாடம்.

பால்மா வகைகளின் விலை 4.7 வீதம் அதிகரிக்கும் என்ற செய்தி வந்த உடனேயே பால் தேனீரின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்திருக்கிறார்.

இதன்படி ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஒரு கோப்பை தேனீரின் விலையை பத்து ரூபா அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

தேனீருக்கு பத்து ரூபா விலை அதிகரிப்பு என்பது அதற்கு சமதையாக பலகார வகைகளிலிருந்து ஒவ்வொரு உணவுப் பொருள்களிலும் பிற அத்தியாவசியப் பொருள்களிலும் சங்கிலித் தொடராக விலை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லது.

பால்மா இறக்குமதியாளர் சங்கம் தங்களுக்குள் தீர்மானித்து பால்மாவின் விலையை அதிகரிக்கும் போது அதைல் பார்த்திருப்பதை தவிர ஆட்சிப் பீடத்திற்கு வேறு வழி இல்லை என்பதுதான் இப்போதைய நிலைமை.

மக்களின் வாழ்க்கைச் செலவு எகிறி வருகின்றது. விலைவாசி உயர்ந்து வருகிறது. சாதாரண அப்பாவி அன்றாடம்காய்ச்சி மக்கள் தினசரி இரண்டு நேரம் கூட வயிறார உணவு உண்ண முடியாத நெருக்கடிக் கட்டம் தொடர்கின்றது. விலைவாசி விடயத்தில் ஏதோ வெட்டி வீழ்த்தப் போவதாகக் கங்கணம் கட்டி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் விழி பிதுங்கி, அல்லாடி நிற்கின்றது என்பதுதான் கள யதார்த்தம். இந்த அரசினால் மக்களுக்கு வசதியான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என்பதுதான் அதன் போக்கிலிருந்து புலனாகும் இறுதிக் கருத்தாகும்.



# மன்னார் விளாங்குளி கிராமத்தில் உயிரிழந்த நிலையில் யானை மீட்பு!

## விவசாய காணியின் உரிமையாளர் கைது

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விளாங்குளி கிராமத்தில் உள்ள வயலில் இருந்து உயிரிழந்த நிலையில் யானை ஒன்று நேற்று புதன்கிழமை (19) காலை மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானை 18 வயதுடையது எனத் தெரிய வந்துள்ளது.

நேற்று புதன்கிழமை (19) அப்பகுதிக் குச் சென்றவர்கள் யானை ஒன்று உயிரிழந்து கிடப்பதை அவதானித்து உறிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இந்த நிலையில் பொலிஸார், மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், வன ஜீவ ராசிகள் திணைக்கள வைத்தியர் ஆகியோர் குறித்த வயல் பகுதிக்குச் சென்று உயிரிழந்த யானையை பார் வையிட்டனர்.

நீண்ட காலமாக குறித்த பகுதியில் யானை தொடர்ச்சியாக நெற்பயிரை சேதப் படுத்தி வந்ததாகவும் தெரியவருகிறது.

மீட்கப்பட்ட யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பில் ஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் சடல சோதனைகளை முன்னெடுத்த நிலையில் அந்த யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அந்த விவசா யக் காணியின் உரிமையாளர் மன் னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.மேலதிக விசார ணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.




# கரவெட்டியில் மக்கள் நிதிப் பங்களிப்பில் சந்தை அமைந்தது முன்மாதியான செயல்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டு

(வடமராட்சி நிருபர்)

மக்களின் நிதிப்பங்களிப்புடன் பிரதேச சபையும் இணைந்து இவ்வாறு சந்தை ஒன்றை அமைத்திருக்கும் செயற்பாடு இலங்கையில் வேறு எங்கும் நடைபெற்றதாக நான் அறியவில்லை. இந்த மக்கள் முன்மாதிரியாகச் செயற்பட்டிருக்கின்றார்கள். எதிர்காலத்தில் இதை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய இடங்களில் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார்.

கரவெட்டியில் அமைந்துள்ள வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, மக்களின் நிதிப்பங்களிப்பில் புனரமைக்கப்பட்ட கோவிற்சந்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு சந்தை வளாகத்தில் இன்று வியாழக்கிழமை (20) சபைச் செயலர் க.கம்சநாதன் தலைமையில் இடம்பெற்றது.

சபையின் 4 மில்லியன் ரூபா நிதியும், மக்களின் நன்கொடையான 27 மில்லியன் ரூபா நிதியுமாக மொத்தம் 31 மில்லியன் ரூபாவில் சந்தை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

தலைமைத்துவமும், மக்களின் பங்களிப்பும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இந்தச் சந்தை மிகச் சிறந்த உதாரணம்.

சொன்னதை செய்பவர்கள், சொன்னதையும் செய்யாதவர்கள், மக்களுக்கு தொல்லை கொடுப்பவர்கள் என்று பல்வேறு தரப்பினரும் நிறுவனங்களின் தலைவர்களாக இருக்கின்றனர். ஆனால் இந்தச் சபையின் செயலர் ஏற்கனவே வேறு பல விடயங்களிலும் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கியிருக்கின்றார்.

நான் ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் புதிய பல பிரச்சினைகள் மக்களிடம் இருந்து எனக்கு வருகின்றன. அரச நிறுவனங்களுக்கும், தங்களுக்கும் இடையிலான பாலமாக நான் இருக்கவேண்டும் என அந்த மக்கள் கருதுகின்றார்கள்.

மாவட்டச் செயலராக வடக்கின் 4 மாவட்டங்களில் பணியாற்றியமையால் மக்களை நன்கு தெரியும். அதனால் அவர்கள் அப்படிக் கருதுகின்றார்கள். எங்கள் அதிகாரிகள் மக்களை அலைக்கழித்து, பந்தடிக்கின்றனர். தங்களிடம் வரும் மக்களுக்கு ஒரு விடயத்தை தங்களால், செய்ய முடியாவிடின் மேலதிகாரிகளிடம் கலந்தாலோசிக்கலாம். அதைவிடுத்து மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்கின்றார்கள்.

பிரதேச சபைகள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிறுவனங்களாக இருக்கின்றன. ஆனால் எங்களின் சபைகளின் சில செயலர்கள், தங்கள் சபையின் வருவாய்களை நிரந்தர வைப்பிலிடுவதிலேயே கூடுதல் கவனம் செலுத்துகின்றனர். அந்த நிதியில், வரியைச் செலுத்துகின்ற மக்களுக்கு அபிவிருத்தி செய்வதற்கோ, அவர்களின் குறைகளைப் போக்குவதற்கோ தயாரில்லை.

இந்தச் சபையின் செயலரைப் போன்று துணிவுடன் ஏனைய சபைகளின் செயலர்களும் பணியாற்றவேண்டும். துணிவுடன் பணியாற்றுவதற்கு நேர்மை மிக முக்கியம்.

இன்று பிறருக்கு உதவி செய்பவர்கள் பலனை எதிர்பார்த்துச் செய்ய முற்படுவதால்தான் பல இடங்களில் பிரச்சினைகள் வருகின்றன. சேவையாக உதவி செய்பவர்கள் அரிது. ஆனால், இந்தக் கட்டடத்துக்குப் புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்கள் வழங்கிய நிதிப்பங்களிப்பு மகத்தானது.

நாங்கள் எதையும் குழப்பியடிப்பதில் வல்லவர்கள். ஆக்கபூர்வமாக எதைச் செய்ய முற்பட்டாலும் விமர்சனங்களை முன்வைத்து அதைக் குழப்பிவிடுவார்கள். அதையும் தாண்டி இந்தச் சந்தை இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் பங்களிப்புடன் செய்யும்போது, மக்களுக்கு இது எங்களின் சந்தை என்ற உணர்வு இருக்கும். எனவே அதை நிச்சயம் அவர்களே பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்.– என்றார்.









இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, கரவெட்டி பிரதேச செயலர் உமாமகள் மணிவண்ணன், கோவிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கந்தசாமி மகிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச சபை நன்கொடையாளர்களிடம் இருந்து நிதயைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சட்டரீதியான இடையூறுகள் இருந்த நிலையில், சட்ட அந்தஸ்துள்ளதொரு அமைப்பை உருவாக்கவேண்டும் என்பதற்காக கோயில் சந்தை அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்து, கோயில் சந்தை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கணக்கினூடாக பெற்று அரச கணக்கு பொறிமுறை ஊடாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 'கியூஆர்' மூலமான முறைப்பாட்டை ஆதாரங்களுடன் முன்வையுங்கள்!

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவகங்களில் நேற்று புதன் கிழமை (19) திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 'கியூஆர்' மூலமான முறைப்பாடு மற்றும் நேரடியாக வழங்கப்பட்ட முறைப்பாடு என்பனவற்றை அடிப்படையாக கொண்டு அதன் உண்மைத் தன்மையை அறிய சில உணவு கையாளும் நிறுவனங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகரால் பரிசீலனை செய்யப்பட்டது. இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது.



அத்துடன் தற்போதைய நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.


பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் எமக்கு 'கியூஆர்' ஊடாக முறைப்பாடுகளை முறையாக வழங்கும் பட்சத்தில் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பலசரக்கு கடைகள் சிலவும் திடீர் பரிசோதனை செய்யப்பட்டன. இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் காணப்பட்ட உழுவா மற்றும் மாசி என்பன கைப்பற்றப்பட்டன. அந்தக் கடையின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் சந்தேகத்துக்கு இடமான வகையில் காணப்படும் கறுப்பு மிளகின் மாதிரி பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நடவடிக்கையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.





EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# எருக்கலம்பட்டி மறுமலர்ச்சி அமைப்பால் முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் அமைப்பு

(றிபாஸ்)

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நிரந்தர கட்டடம் இன்றி இயங்கி வந்த முன்பள்ளி ஒன்றுக்கு மன்னார் எருக்கலம்பட்டி மறுமலர்ச்சி அமைப்பினரால் நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் அறுபது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த முன்பள்ளி பாடசாலையைத் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதியமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனீர் முளப்பர் பிரதம அதிதியாகவும், டாக்டர் சாபீ சிஹாப்தீன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். மறுமலர்ச்சி அமைப்பின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

அமைக்கப்பட்டுள்ள பலர் பாடசாலை நிரந்தரக் கட்டடத்துடன் இணைந்ததாக மாணவர் அரங்கு விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

'கல்வியினூடாக எதிர்காலம்' எனும் குறிக்கோளுக்கு அமைய செயற்பட்டு வரும் மன்னார் எருக்கலம்பிட்டி மறுமலர்ச்சி அமைப்பினர், கடந்த பல வருடங்களாக கல்விக்கான பல வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான நிதி உதவி வழங்கி வைத்தல், பாடசாலை கல்விக்கு புறம்பாக மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், விடுதிகளில் தங்கியிருக்கின்ற மாணவர்களுக்கான உதவிகள் வழங்கி வைத்தல், தள பாடங்கள் பற்றாக்குறைவான பாடசாலைகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுத்தல், வசதியற்ற மாணவர்களுக்கான புலமை பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கல்வி கற்பதற்கான அடிப்படை வசதியற்ற ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபரணங்களை பெற்றுக் கொடுத்தல் போன்ற உதவி நலத்திட்டங்களை இவ் அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

2007ஆம்ஆண்டுஆரம்பித்துவைக்கப்பட்ட இவ் அமைப்பின் தலைவராக லுக்மான் சஹாப்தீன், செயலாளராக எம்.ஏ.ரம்சீன், பொருளாளராக கே.எம். மஸாகிர் ஆகியோர் செயற்பட்டு வருவதுடன் பலர் நிர்வாக உறுப்பினர்களாக இருந்து கல்விக்கான பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.





# உள்ளூராட்சித் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப் பெரும்பான்மையுடன் நாம் கைப்பற்றுவோம்!

## உதுமான்கண்டு நாபீர் உறுதி

(அபு அலா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை இலக்காகக் கொண்டு களமிறங்கியுள்ள நாபீர் பவுண்டேஷன் சுயேட்சைக் குழு சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப் பெரும்பான்மையுடன் கைப்பற்றுவோம் என்று அதன் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவை நேற்று (19) நாபீர் பவுண்டேஷனின் அரசியல் செயற்பாட்டாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எம்.எல்.துல்கர் நயீம் கொண்ட குழுவினர் அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியாளர் அலுவலகத்தில் கையளித்துள்ளனர்.


இதுதொடர்பில், சுயேட்சைக் குழுவின் தலைவர் உதுமான் கண்டு நாபீர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய கட்சிகள், சிறுபான்மை கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என கூடுதலான கட்சிகள் களமிறங்கியுள்ளன. இந்த நிலைமையில், எமது சுயேட்சைக் குழு அறுதிப் பெரும்பான்மையால் சம்மாந்துறைப் பிரதேச சபையைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

கடந்த 32 வருட காலமாக எந்த எதிர்பார்ப்பின்றி நாங்கள் செய்த சேவை நிமித்தம், இன்று மக்களிடம் ஆணையைக் கேட்டு நிற்கின்றோம். இனம், மதம் கட்சி, வேதம் பாராமல் பரவலாக மக்களுக்கு செய்த சேவைகளின் அடிப்படையில் சம்மாந்துறை பிரதேசசபையைமையமாகக்கொண்டே நாங்கள் களமிறங்குகின்றோம். இதன் வெற்றியின் அடிப்படையில் எதிர்வருகின்ற காலங்களில் எமது அரசியல் பரலடைந்து இன்னும் பல சேவைகளை எமது மக்களுக்கு வழங்கவுள்ளோம்.

கடந்த கால சேவைகளை அரசியலின் அடிப்படையில் வியாபிக்க வேண்டும் என்பதை எமது பூரண இலக்காகக் காணப்படுகின்றது. அதற்காக எனது மக்கள் எனக்கான அரசியல் அதிகாரத்தை தருவார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கின்றது.– என்றார்.





# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் இப்தாரும், புதிய நிர்வாக அறிமுகமும்

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வும், புதிய நிர்வாக சபை அறிமுகமும் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றன.

புதிய நிர்வாக சபையின் தலைவர் டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவையும் துஆப் பிரார்த்தனையையும் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.ஆதம்பாவா நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக சபை அறிமுகமும் இப்தாரும் இடம்பெற்றன.நிகழ்வின் நன்றியுரையைச் சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் நிகழ்த்தினார்.

நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எம்.எம். சலீம், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் உப தலைவரும் முபாரக் நிறுவனத்தின் அதிபருமான எம்.எஸ்.எம். முபாரக், பொருளாளர் தொழிலதிபர் ஏ.எல். எம்.முஸ்தபா உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள், சாய்ந்தமருது பிரதேச மஹல்லா பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான கூட்டம் காரைதீவில்

(நூருல் ஹுதா உமர்)

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட பெண்கள் அமைப்பு என்பவற்றின் அனுசரணையுடன் பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு கூட்டம் மற்றும் பால்நிலைசார் வன்முறைகெதிரான செயலணிக் கூட்டம், போதைப் பொருள் முன்தடுப்பு கூட்டம் போன்றன காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

காரைதீவு பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பில் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் காரைதீவு பொலிஸார், சிறுவர் மகளிர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.








# வவுனியா புதிய பஸ் நிலைய இருக்கைகள் பயணிகள் பயன்படுத்த முடியாத நிலையில்

(கி.வசந்தன்)

வவுனியா புதிய பஸ் நிலைய இருக்கைகள், பயணிகள் அமர முடியாதவாறு உடைந்து காணப்படுகிறது என்றும் அதில் அமர்வோர் விழும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

புதிய பஸ் நிலையத்தில் காணப்படும் இருக்கைகள் உடைந்து, பழுதடைந்து காணப்படுவதால் பயணிகள் ஆறுதலாக அமர்ந்திருந்து பயணங்களை மேற்கொள்ள முடியவில்லை என்றும் நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் பெரும் சிரமம் அடைகின்றனர் எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் இருந்தும் வந்து செல்வோர் அதிகமாகக் கூடும் இடமாகவும் உள்ள பிரதான பஸ் நிலையத்தின் இருக்கைகளே இவ்வாறு உடைந்து காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழ் மக்கள் கூட்டணியினர் இன்றும் வேட்புமனு தாக்கல்!

(எஸ். நிதர்ஷன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணத்தில் இன்றும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது.

இன்று காலை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை 'மகாபாரதம்' அருளுரை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், வாராந்த நிகழ்வாக, நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆன்மீக அருளுரை இடம்பெறவுள்ளது.

இதன்போது "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார்.



# தேசிய மக்கள் சக்தி வேட்பு மனுத் தாக்கல்!

**(க.கிஷாந்தன்)**

நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தேசிய மக்கள் சக்தி இன்று (20) காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 01 மாநகர சபை, 02 நகர சபைகள் மற்றும் 08 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை நுவரெலியா மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி துஷாரி தென்னகோன் முன்னிலையில் கையளித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன உள்ளிட்ட பலர் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து வேட்பு மனுவைத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.



# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பு மனுத் தாக்கல்!

**(க.கிஷாந்தன்)**

நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்று (20) காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 01 மாநகர சபை, 02 நகர சபைகள் மற்றும் 08 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை நுவரெலியா மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி துஷாரி தென்னகோன் முன்னிலையில் கையளித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.



# ‘ஆகம ஞான சிரோன்மணி’ பட்டம் பாபு சர்மாவுக்கு வழங்கிக் கௌரவம்

சுவாமி மலை ஓல்டன் நிலாவத்தை தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய பஞ்ச குண்டபக்ஷ அஷ்டபந்தன பிரதிஷ்ட கும்பாபிஷேக பெருவிழாவில் வைத்து கலாநிதி சிவ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவுளுக்கு ஆலய பரிபாலன சபையினர் சார்பாகவும் தோட்டவாழ் மக்கள் முகாமையாளர் சார்பாகவும் கும்பாபிஷேக பிரதம குருக்கள் சிவஸ்ரீ சண்முக பிரசாத் குருக்கள் பாபு ஷர்மா ‘ஆகம ஞான சிரோன்மணி’ எனும் சிறப்பு கௌரவப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.



# வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதி நாள்; கிழக்கு மாகாணத்தில் விசேட பாதுகாப்பு!

(பழுவூரான்)

உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித் தினமான இன்று கிழக்கு மாகாணத்தில் சகல மாவட்ட செயலகங்களிலும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரில் இன்று வியாழக்கிழமை (20) உள்ளூ ராட்சித் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதி தினத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. நகரின் முக்கியமான இடங்களில் பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். இதேவேளை வேட்பு மனுக்களை தாக்கல் செய் யும் பழைய மாவட்ட செயலகத்தை அண்டிய வளாகத்தில் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

தேர்தல் கடமைக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த ஊழியர்கள் மாத்திரம் உட்செல்ல அனுமதி அனு மதிக்கப்பட்டிருந்தனர். வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கு விசேட அனுமதி பத்தி ரங்கள் வழங்கப்பட்ட பின்னரே மாவட்ட செயலகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அரசியல் கட்சிகளின் ஆதரவாளர் கள் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு அப்பால் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. மாவட்ட செயலகத்துக்கு வரும் வாகனங்கள்பரிசோதிக்கப்பட்டபின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டன. விசேட வீதிப் போக்குவரத்துதில் நடமா டும் பொலிசாரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.




# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்!

சுதந்திர இலங்கையின் மற்றுமொரு உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது. வேட்புமனுத் தாக்கல் நாடளாவிய ரீதியில் நடைபெற்று முடிந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 24 மாநகர சபைகளுக்கும் 41 நகர சபைகளுக்கும் 275 பிரதேச சபைகளுக்குமாக மொத்தம் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

35 வயது உட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமையும் பெண்களுக்கு 25 வீதமான இட ஒதுக்கீடும் வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது.

தற்போதைய உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைமுறை 2018 ஆம் ஆண்டு முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது .

அதாவது இவ் உள்ளூராட்சி மன்ற தேர்தல் வட்டார ரீதியிலும், விகிதாசார ரீதியிலும் உறுப்பினர்கள் தெரிவாகும் வகையில் நடத்தப்படுகிறது.

வட்டாரப் பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக போனஸ் முறையில் விகிதாசார ரீதியிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

நான்கு ஆண்டுகள் ஆயுள்காலத்தைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2022 இல் முடிவடைந்தது . எனினும் அன்றிலிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு வருடத்துக்குப் பதவிக் காலத்தை நீடித்தார்.

பின்னர் 2023 தேர்தலை நடத்த வேட்புமனு கோரப்பட்டுக் கட்டுப்பணமும் செலுத்தப்பட்ட போதிலும் தேர்தல் பிற்போடப்பட்டு வந்தது.

அதாவது அது 2022.01.10 ஆம் திகதிய 2262 - 08 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் உறுப்பினர்களின் பதவிக்காலம் 19.03.2023 உடன் முடிவுறுத்தப்படுவதால் சபைகள் செயலிழந்து போயின.

மேற்குறித்த சபைகளின் நிர்வாகம், ஜனாதிபதிக்கு உள்ளூராட்சி சபைகளின் சட்டங்களின் கீழுள்ள அதிகாரங்களின் ஊடாக வர்த்தமானி பிரசுரம் மூலம், விசேட ஆணையாளர்களுக்கு ஒப்படைக்கப்படலாம் .

மேற்குறிப்பிட்டவாறு வர்த்தமானிப் பிரசுரம்மூலம்விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்படாத பட்சத்தில், பிரதேச சபைகளின் செயலாளர்கள் பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் கீழும், நகர சபைகளின் செயலாளர்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 184 ஏ யின் கீழும் மாநகர ஆணையாளர்கள் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 286 ஏ யின் கீழும் சபைகளதும், தவிசாளர்கள் – முதல்வர்களதும் அதிகாரங்களைப் பெறுவர் என்று கூறப்பட்டது .

ஆதலால் இதுவரை காலமும் செயலாளர்களால் சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

2024 இல் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நடத்த ரணில் நடவடிக்கை எடுப்பார் என்று பார்க்கப்பட்ட பொழுதிலும் ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்ற தேர்தலை நடத்தினார்.

அதன் காரணமாக தேசிய மக்கள் சக்தி 159 உறுப்பினர்களை பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரமுன என்று மாறி சபைகளை கைப்பற்றி வந்தன.

இருந்த போதிலும் கடந்த ஆண்டு நடைபெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகளை தொடர்ந்து அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் பலர் தாமாக ஒதுங்கிக் கொண்டனர்.

இந்த நிலையில் இம் முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் கட்சிகளிடையே பெரும் சவாலாக மாறி இருக்கிறது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டில் அனாவசிய செலவுகளை குறைத்து அரசை நடத்த வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றார்.

அண்மையில் நடைபெற்ற சுதந்திர தினம் வெளிநாட்டு பயணங்கள் அமைச்சர்களின் பதவிப்பிரமாணம் என்பன வெல்லாம் இதற்கு சாட்சியாக இருக்கின்றன.

ஆனாலும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எந்த விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படாத நிலையில் 2018 அடிப்படையிலேயே அதாவது வட்டார ரீதியிலும் விகிதாசார ரீதியிலும் உறுப்பினர்கள் தெரிவாகும் நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

2018 இற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளில் இருந்த உறுப்பினர்களை புதிய முறைமையால் இரண்டு மடங்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்த அதிகரிப்பு மேலதிக செலவினத்தை ஏற்படுத்துவதால் இதை 4000 ஆக குறைக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்தார்.

உதாரணத்துக்கு 10 பேர் இருந்த சபையில் இன்று 21 பேர் தேவையற்ற வகையில் உள்ளனர். இது மேலதிக நிதி விரயம் செய்யப்படுவதாக அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தேவையற்ற பாதுகாப்பு வாகன பயன்பாடு போன்றவற்றை கவனத்தில் எடுத்துள்ளார்கள் .

தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வருவதில் காலத்தை இழுத்தடிக்காமல் தேர்தலை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அரசு வந்தது. அதாவது பழைய முறையிலேயே தேர்தல் இடம் பெறவுள்ளது.

அதே நேரம் 2022 ஆம் ஆண்டுக்கு பிறகு அதிகமான புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதால் நடந்து முடிந்த இரண்டு தேர்தல்களை விட உள்ளூராட்சி தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாகப் புதிய வாக்காளர்கள் இருப்பார்கள் என்பதையும் மறந்து விட முடியாது.



**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**
காரைதீவு நிருபர்




# வேட்புமனு தாக்கல் செய்தார் ஜீவன் தொண்டமான்!

(க.கிஷாந்தன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இன்று (20) நுவரெலியா மாவட்டத்துக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்தார்.

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில், 2025 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இம்முறை சேவல் சின்னத்தில் போட்டியிடுகின்றது. வளப்பனை பிரதேச சபை மாத்திரம் நாற்காலி சின்னத்தில் போட்டியிடுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகரசபை, ஹட்டன் – டிக்கோயா நகரசபை, தலவாக்கலை–லிந்துள்ள நகரசபை மற்றும் மஸ்கெலியா, நோர்வூட், கொட்டகலை, அக்கரபத்தனை, அம்பகமுவ, கொத்மலை, வளப்பனை, ஹங்குராகெத்த பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று (20) நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தேர்தல் கடைமைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக அலுவலகத்தில் தாக்கல் செய்யபட்டது.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், நிதிச் செயலாளரும் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா. உயர்மட்ட உயர்மட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மன்னாரில் நிறைவு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று வியாழக்கிழமை (20) மதியம் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் பொலிஸ் பாதுகாப்புடன் வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர் இன்று வியாழக்கிழமை (20) மன்னார் மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுவைக் கையளித்துள்ளனர்.

கட்சியின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.முனவ்பர் தலைமையில் மன்னார் நகரசபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களை கையளித்துள்ளனர்.

இதேவேளை கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று வியாழக்கிழமை (20) மன்னார் மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

முன்னாள் நாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் மன்னார் நகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய இரு சபைகளிலும் போட்டியிட வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியும் (20) வேட்பு மனுவை கையளித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் தலைமையில் மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களைக் கையளித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் நகரசபை மற்றும் மூன்று பிரதேச சபைகளிலும் போட்டியிட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையிலான ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி சார்பாக வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் மாவட்ட இணைப்பாளர் அபூபக்கர் தர்சின் தலைமையிலான குழுவினர் இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இன்று மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தலைமையில் மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.



### சர்வதேச நீதிமன்றில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி:

# மனிதகுலத்துக்கு எதிரான படுகொலை விசாரணை!!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா.

(மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை மேற் கொண்ட ஒரு ஆசிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு சர்வதேச நீதிமன்றில் தண்டனை வழங்கப்படவுள்ளது. இதனால் போர்க் குற்றங்களை இழைத்த மற்றைய நாடுகளின் தலைவர்களும் அச்சத்தில் உள்ளனர். முக்கியமாக பர்மா, கம்போடியா, இந்தோனேசியா, இலங்கை போன்ற நாடுகளிலும் பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இந்த நாடுகளின் முன்னாள் ஆட்சியாளர்களும் , பதவியில் உள்ள தலைவர்களும் பிலிப்பைன்ஸ் தலைவரின் கைதை அடுத்து கதிகலங்கிப் போயுள்ளனர்.)

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ LnlhNl (Rodrigo Duterte) ஹேக்கில் உள்ள (hague) சர்வதேச நீதிமன்ற விசாரணைக்காக மணிலாவில் இருந்து விமானம் மூலம் கடந்த வாரம் நாடு கடத்தப்பட்டார்.

இவருடைய ஆறு வருட ஆட்சிக் காலத்தில் பல ஆயிரம் மக்களை கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்டு இன்டபோலினால் கைது செய்யப்பட்டார்.

**சர்வதேச விசாரணை**

அவர் பிலிப்பைன்ஸ் நாட்டின் பதவியில் இருந்தபோது மேற்பார்வையிட்ட போதைப்பொருள் மீதான கொடிய ஒடுக்குமுறையுடன் தொடர்புடைய மனிதகுலத்திற்கு எதிரான குற்றச்சாட்டை தற்போது எதிர்கொள்கிறார்.

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஹாங்கொங்குக் கான ஒரு தனிப்பட்ட பயணத்திலிருந்து திரும்பிய வேளை மணிலா விமான நிலையத்தில் வைத்து கடந்த மார்ச் 11 ஆம் திகதி செவ்வாயன்று பொலிஸார் கைது செய்தனர்.

79 வயதான அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படும் முதல் ஆசிய முன்னாள் அரச தலைவராக மாறியுள்ளார். தனது நாடு கடத்தலை எதிர்த்துப் போராடிய டுடெர்ட்டே, 2016 முதல் 2022 வரை பிலிப்பைன்ஸை வழிநடத்தினார்.

மணிலாவில் பதவிக் காலத்தில் அவர் மேற்கொண்ட கொடூரமான போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கையில் பல ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

டிகொங் என்று அழைக்கப்படும் வழக்கறிஞரான ரோட்ரிகோ டுடெர்டே பிலிப்பைன்ஸின் 16 ஆவது

தொடர்ச்சி▼






# மனிதகுலத்துக்கு எதிரான படுகொலை விசாரணை!!

**தொடர்ச்சி▲**

ஜனாதிபதி ஆவார். அவர் 22 வருடங்களுக்கும் மேலாக 1,449,296 மக்கள் தொகை கொண்ட மிண்டானாவோ மாகாணத்தின் டவாவோ நகரத்தின் மாநகரத் தலைவராக பணியாற்றினார்.

அவரே பிலிப்பைன்ஸின் வரலாற்றில் நீண்ட காலம் பணியாற்றிய மாநகரத் தலைவர்களில் ஒருவராவார். அதற்கு முன்பு துணை மாநகரத் தலைவராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

போதை பொருள் குற்றவாளிகளுக்கு எதிரான கடுமையான கொள்கைகளுக்காக உள்ளூரில் இவர் பெரிதும் புகழ் பெற்றவராவார். இதனால் அமெரிக்க டைம் இதழ் இவரை “கடுமையாக தண்டிப்பவர்” என பெயரிட்டுள்ளது.

இவரின் ஆதரவுடனேயே போதை மருந்து கையா ளுபவர்கள், குற்றவாளிகள், கமற்றும் பிற சட்டவிரோத குழுக்களை தண்டனைக் கொலை செய்ததாக கருதப் படுகின்றது.

இருபது ஆண்டுகளுக்கும் மேலான பிலிப்பைன்சின் கொலைத் தலைநகரம் என்பதிலிருந்து தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் அமைதியான நகரமாக மாற்றினார் என்றும் அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாகப் போட்டியிட பலமுறை அவருக்கு வேண்டுகோள் விடப்பட்டும் 2015 வரை தவறான அரசமைப்பு எனக் கூறியும் குடும்ப எதிர்ப்பு காரணமாகவும் செவிமடுக்கவில்லை. இருப்பினும், நவம்பர் 21, 2015ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார்.

அவர் ஜனாதிபதி தேர்தலில் 39.01 வீதம் வாக்குக ளுடன் வெற்றி பெற்றார். அவரது துணை ஜனாதிபதி வேட்பாளர் வெற்றிபெறவில்லை. எனவே லிபரல் கட்சியின் லெனி ராப்ரெடோ துணை ஜனாதிபதியானார்.

ஆனால் ஒக்ரோபர் 2021 இல், ரோட்ரிகோ டுடெர்டே 2022 இல் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவில்லை என்றும் அரசியல் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்தார்.

ஆட்சியிலிருந்து விலகிய பின்னரே அவர் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நீண்ட காலமாக சட்ட ரீதியாக அவர் போராடி வந்தார். ஆனால் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) உத்தரவின் பேரில் மணிலாவில் கைது செய்யப்பட்ட பின்னர், பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே (சுழனசபைழ னுரவநசவந) நெதர்லாந்துக்கு நாடு கடத்தப்பட்டார்.

அனைத்துலக

**குற்றவியல் நீதிமன்றம்**

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court -ICC) நெதர்லாந்தின் டென் ஹேக் நகரில் அமைந்துள்ள ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பு ரீதியான பன்னாட்டு நீதிமன்றம் ஆகும்.

உலகில் இனப்படுகொலை, மானுடத்துக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உருவாக்கப்பட்டது. இது நாடுகளுக்கிடையேயான தகராறுகளை விசாரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான பன்னாட்டு நீதிமன்றத்திலிருந்து வேறுபட்டது.

123 நாடுகள் இந்நீதிமன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றன, ஆனால் ரஷ்யா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகள் இந்த அமைப்பை கண்டனம் செய்ததுடன் உறுப்பினராக சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ, ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்ததை ஒப்புக் கொண்டுள்ளார். இத்தனைக்கும் தெற்காசிய நாடான பிலிப்பைன்சில் சட்டவிரோத போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்கும் முயற்சியிலேயே ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு எழுந்தது. முன்னாள் ஜனாதிபதி துப்பாக்கியால் பலரை சுட்டுக்கொன்றதாகவும் கூறப்பட்டது. இதையடுத்து நெதர்லாந்து நாட்டின் சர்வதேச நீதிமன்றத்தில் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ரோட்ரிகோ நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும் போது அவரது ஆதரவாளர்கள் திரண்டு நின்று கோஷங்களை எழுப்பினர். நீதிமன்றில் தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்பதாக ரோட்ரிகோ டியுடெர்ட் தெரிவித்தார்.

கைதான பின்னர் அவர் நாட்டு மக்களுக்கு பேசுகை யில், நான் தான் நம் சட்டம் மற்றும் ராணுவத்தை வழிநடத்தினேன். உங்களை பாதுகாப்பேன் என்று கூறினேன். இதற்கான அனைத்துப் பொறுப்பையும் நானே ஏற்கிறேன் என கூறியிருக்கிறார்.

தற்போது ரோட்ரிகோ தனது குற்றத்தை ஒப்புக்கொண் டதால் அவருக்கு தண்டனை வழங்கப்படும் என்பது உறுதியாகியுள்ளது.

மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை மேற்கொண்ட ஒரு ஆசிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு தண்டனை வழங்கப்படவுள்ளது. இதனால் போர்க் குற்றங்களை இழைத்த மற்றய நாடுகளின் தலைவர்களும் அச்சத்தில் உள்ளனர்.

முக்கியமாக பர்மா, கம்போடியா, இநதோனேசியா, சிறிலங்கா போன்ற நாடுகளிலும் பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இந்நாடுகளின் முன்னாள் ஆட்சியா ளர்களும் , பதவியில் உள்ள தலைவர்களும் பிலிப் பைன்ஸ் தலைவரின் கைதை அடுத்து கதிகலங்கிப் போயுள்ளனர்.





# சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காத உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எல்லைக்கு உட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள பெண்கள் விடுதி சிற்றுண்டி சாலை மற்றும் சம்மாந்துறை பகுதியில் உள்ள உணவு உற்பத்தி நிலையங்கள், இறைச்சிக் கடைகள் என்பன சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

குறித்த முறைப்பாடுக்கு அமைய நேற்று (19) புதன்கிழமை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையிலான குழுவினரால் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சுகாதார வைத்திய அதிகாரிகளால் குறித்த சிற்றுண்டி சாலை உரிமையாளருக்கு எதிராகவும், இரண்டு உணவகங்களுக்கும் எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர்படுத்திய போது 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. எச்சரிக்கையையும் செய்யப்பட்டது. இந்தச் சோதனை நடவடிக்கையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரி சோதகர் எம்.என்.எம். பைலான் தலை மையிலான குழுவினர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.







# அம்பேபுஸ்ஸ – திருமலை வீதியில் விபத்தில் நெதர்லாந்து பெண் பலி!

முன்னால் நடந்த விபத்தைத் தவிர்க்க முயன்று திடீரென திரும்பிய போது, எதிர் திசையில் வந்த லொறியுடன் மோதி ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளாகியதில் நெதர்லாந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பேபுஸ்ஸ – திருகோணமலை வீதியின் பெல்வெஹர பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (18) இரவு இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை பகுதியில் இருந்து ஹபரணை நோக்கிச் சென்ற மோட்டார் வாகனம் ஒன்று கடை ஒன்றுக்கு முன்னால் நிறுத்துவதற்காக வீதியின் இடது பக்கமாக திருப்ப முற்பட்ட போது, வீதியின் அதே திசையில் பயணித்த ஓட்டோ ஒன்று அந்த மோட்டார் வாகனத்தின் பின்பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த நிலையில் அதே திசையில் சென்ற மற்றொரு ஓட்டோ முன்னால் நடந்த விபத்தைத் தவிர்க்க முயன்று திடீரென வீதியின் வலது பக்கமாக திரும்பிய போது, எதிர் திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட 4 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் படுகாயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அவர்களில் ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 54 வயதுடைய நெதர்லாந்து பெண் என தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருமலையில் இன்று வேட்புமனு!

(எஸ்.கீதபொன்கலன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 09 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று வியாழக்கிழமை (20) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.தௌபீக் தலைமையில் இந்த வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது.



இதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிட்டு நான்கு சபைகளைக் கைப்பற்றி இருந்தது.

இந்த முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருகோணமலை மாவட்டத்தில் 5 சபைகளைக் கைப்பற்றும்.– என்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து 136 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 319,399 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சட்டவிரோத மதுபானம் உற்பத்தி; காத்தான்குடியில் ஒருவர் கைது!

(ந.குகதர்சன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் ஆரையம்பதி பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாகச் சாராயம் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இன்று (20) வியாழக்கிழமை குறித்த இடத்தை மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இதன்போது சட்டவிரோத மதுபானங்களை கைப்பற்றியுள்ளனர் என்றும் உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 570 லீற்றர் கோடா அடங்கிய நான்கு பரல்கள், 30 லீற்றர் வடி சாராயம் அதனை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் போதைப் பொருள் ஒழிப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஆரையம்பதி பகுதியில் வீடு ஒன்றுக்குள் வடி சாராயம் காச்சிக்கொண்டிருக்கும் போதே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, மீட்ட பொருள்களுடன் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் போதைப்பொருள் ஒழிப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# காசாவின் நிலைமை கவலை அளிக்கிறது; இந்திய வெளிவிவகார அமைச்சு தகவல்

காசாவின் நிலைமை கவலை அளிக்கிறது என்றும் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'காசாவின் நிலைமை குறித்து நாங்கள் கவலைப் படுகிறோம். அனைத்து பணயக் கைதிகளும் விடுவிக்கப்படுவது முக்கியம். காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்" என்று தெரிவித்துள்ளது.

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே கடந்த ஜனவரி மாதம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த நிலையில், பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவதை ஹமாஸ் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது என்றும் இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் பிற மத்தியஸ்தர்களின் ஆலோசனைகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது எனவும் குற்றம் சாட்டிய இஸ்ரேல், போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக காசா மீது வான்வழித் தாக்குதலைத் தொடங்கியது. இந்தத் தாக்குதல்களில், குழந்தைகள், பெண்கள் உட்பட 400 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்திருந்தது. மேலும், இஸ்ரேலின் இந்த தாக்குதல்களுக்கு அமெரிக்கா வழங்கிய வரம்பற்ற அரசியல் மற்றும் இராணுவ ஆதரவே காரணம் என்றும் ஹமாஸ் குற்றம் சாட்டியது.

ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில், இந்தியா தனது கவலையை தெரிவித்துள்ளது.



# இராமேஸ்வரம் மீனவர்கள் அடையாள வேலைநிறுத்தம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த திங்கள் கிழமை கடலுக்குச் சென்ற கென்னடி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை இலங்கை கடற்படையினர் நெடுந்தீவு அருகே சிறைப்பிடித்து, படகிலிருந்த சங்கர், அர்ஜுனன், தர்மமுனியாண்டி ஆகிய 3 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

3 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஏப்ரல் 1 ஆம் திகதி வரையிலும் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் கடலுக்குச் செல்லாமல் இராமேஸ்வரம் மீன்பிடி இறங்கு தளத்தில் 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிடப்பட்டிருந்தன.

முன்னதாக. இராமேஸ்வரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மீனவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், எல்லை தாண்டிச் சென்று விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





## காசா மீது இஸ்ரேல் தாக்குதல்:

# இது ஆரம்பம் மட்டுமே என்கிறார் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்தம் கடந்த மார்ச் 1 ஆம் திகதி முடிவடைந்த நிலையில், காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

413 பேரின் உடல்கள் கிடைத்துள்ளன எனவும் பல உடல்கள் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

“கடந்த 24 மணி நேரத்தில் ஹமாஸ் எங்கள் கையின் வலிமையை ஏற்கனவே உணர்ந்துள்ளது. இது வெறும் ஆரம்பம் மட்டுமே என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிராக அதிக பலத்துடன் செயல்படும். இனிமேல், பேச்சுவார்த்தைகள் துப்பாக்கிச் சூட்டின் கீழ் மட்டுமே நடைபெறும்” என்று நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க புதிய நிர்வாகத்தின் செயற்பாடுகள் வர்த்தகப் போரைத் தோற்றுவித்துள்ளது

## பிட்ச் ரேட்டிங்ஸ் தகவல்




அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தினது நடவடிக்கையால் உலகளாவிய வர்த்தகப் போர் தொடங்கியுள்ளதுடன், இதனூடாக உலக பொருளாதார வளர்ச்சி வேகம் குறையக்கூடும் என பிட்ச் ரேட்டிங் எனப்படும் நிதி தரப்படுத்தல் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 2.9 சதவீதம் என்ற உலக பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 2.3 சதவீதமாக குறைவடையலாமென எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், 2026ஆம் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சி 2.2 சதவீதமாக வீழ்ச்சியடையக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், அமெரிக்காவின் 2025 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி முன்னறிவிப்பை 2.1 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டுக்கான முன்னறிவிப்பை 1.7 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாகவும் குறைத்துள்ளதாக பிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தின் செயற்பாடு எவ்வளவு தூரம் நீடிக்கும் என்ற நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது.

இது வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்களின் எதிர்வு கூறல்களை விடவும் நிலைமை கடுமையானதாக இருக்கலாம் என பிட்ச் ரேட்டிங்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உற்பத்தியை அதிகரித்து வர்த்தக பற்றாக்குறையை குறைப்பதனை நோக்கமாகக் கொண்டு அமெரிக்காவின் புதிய நிர்வாகம் இறக்குமதிக்கான மாற்று நிகழ்ச்சி நிரல் ஒன்றை வகுத்துள்ளது.

இந்த இலக்கை அதிக வரி விதிப்புகளால் அடைவதற்கு அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

எனினும் வரி அதிகரிப்புகள் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என பிட்ச் ரேட்டிங்ஸ் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், நிறுவனங்களின் செலவுகள் அதிகரித்து முதலீட்டுக்கான நிச்சயமற்ற நிலை உருவாகலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கிழக்காசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஏற்றுமதி உற்பத்தி துறையினரும் பாதிப்படைவார்கள் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வரி அதிகரிப்பு திட்டம் 2026 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் குறைக்கும் எனவும் பிட்ச் ரேட்டிங்ஸ் கணிப்பிட்டுள்ளது.



# இத்தாலியில் படகு விபத்தில் 6 பேர் பலி; 40 பேர் மாயம்!

இத்தாலியின் லம்பேடுசா தீவில் புலம்பெயர்ந்தோர்களை ஏற்றிச் சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் 40 பேர் காணாமல் போயுள்ளனர் என இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுவரை 10 பேரை மீட்டுள்ளனர். ஏனையவர்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் இத்தாலியக் கடற்படை தெரிவித்துள்ளது.

துனிசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு 56 பயணிகளுடன் இந்த கப்பல் பயணித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக இந்த படகு விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், கடல் அலையின் வேகம் அதிகரித்ததால் மீட்புப் பணிகளை முன்னெடுப்பதில் சிரமம் நிலவுவதாகவும் மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# உக்ரைனுக்கு மேலும் உதவிகளை வழங்குவதற்கு ஜேர்மனி தீர்மானம்!

உக்ரைனுக்கு 3.3 பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவியை வழங்க ஜேர்மனி தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனின் நிதி சீர்திருத்தங்களுக்கான திட்டங்களுக்கு சட்டமியற்றுபவர்கள் அனுமதி அளித்ததை அடுத்து, உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்க ஜேர்மனி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்த வாரம், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாகவும் அச்சந்திப்பில் உக்ரைனுக்கு உதவி வழங்குவது குறித்தும் விவாதிக்க திட்டமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு
பக்கம் 03
வியாழக்கிழமை 20/03/2025

## சமாளிக்க மிகவும் மோசமான நாடுகளில் ஒன்று கனடா

*ட்ரம்ப் சர்சசைக் கருத்து*

சமாளிக்க மிகவும் மோசமான நாடுகளில் ஒன்று கனடா என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சர்சசைக் குரிய கருத்தை தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊட

02



# தனது புதிய அமைச்சரவையினை அறிவிக்கிறார் ஒன்டாரியோ முதல்வர்

**ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்ட் இன்று தனது புதிய அமைச்சரவை உறுப்பினர்களை அறிவிக்கிறார்.**

**கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பிறகு, அவர் தனது அமைச்சரவையை அமைக்கின்றார்.**

**ஒன்டாரியோ மியூசியத்தில் நடைபெறும் விழாவில், முதல்வரும் அவரது அமைச்சரவையும் பதவியேற்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.**

பொதுவாக அமைச்சரவை மாற்றம் பற்றிய விபரங்களை முன்கூட்டியே தெரிவிக்கும் வழக்கம் இருக்கின்றது. ஆனால், ஃபோர்ட் செவ்வாய்க்கிழமை இதுகுறித்து எந்தவொரு அடையாளங்களையும் வழங்கவில்லை.

ஃபோர்ட், பலரையும் மீண்டும் அதே பதவிகளில் வைத்துக்கொள்வாரா அல்லது பெரிய அளவிலான மாற்றங்களை செய்யவாரா என்பது குறித்து உறுதியான தகவல் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் வரி அச்சுறுத்தல்களை நேரடியாக சந்திக்க தான் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2018 முதல் ஃபோர்ட் தனது அமைச்சரவை அளவை தொடர்ந்து அதிகரித்து வருகிறார்.

ஓகஸ்ட் மாதம் கூட புதிய இணை அமைச்சர்களை சேர்த்ததன் மூலம் அமைச்சரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்திருந்தது.

# கனடாவின் புதிய பிரதமருக்கு பிரான்ஸில் அமோக வரவேற்பு

அமெரிக்காவுடனான உறவுகள் மோசமடைந்திருக்கும் சூழலில் பிரான்ஸ்க்கு விஜயம் செய்துள்ள கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னிக்கு பிரான்ஸில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் புதிய பிரதமராகக் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்ற மார்க் கார்னி தமது முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரப் பய ணமாக பிரான்ஸ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரன் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு மகத்தான வரவேற்பை அளித்துள்ளார்.

ஜனாதிபதி மக்ரனுடன் இணைந்து எலிசி அரண்மனையில் கூட்டு செய்தியாளர் மாநாடொன்றிலும் அவர் பங்குபற்றியுள்ளார். பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பக்கம் கனடா இருப்பதை யிட்டு மகிழ்ச்சியடைவதாக ஜனாதி பதி மக்ரன் குறிப்பிட்டுள்ளார்.






# ஆல்பர்ட்டா மாகாணத்தில் வைரஸ் தொற்று; தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் வைரஸ் தொற்று ஒன்று பரவிவரும் நிலையில், தடுப்பூசி பெற்றுள்ளதை உறுதி செய்துகொள்ளுமாறு மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் மண்ணன், தட்டம்மை அல்லது மணல்வாரி என்னும் வைரஸ் தொற்று வேகமாகப் பரவிவருகிறது.

இதுவரை 13 பேருக்கு தட்டம்மைத் தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், ஒரு வயது முதல் 54 வயது வரையுள்ளவர்கள் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



தட்டம்மை வைரஸ் தொற்று புயல்போல் பரவிவருவதாகத் தெரிவித்துள்ள ஆல்பர்ட்டா சிறார் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவரான சித் தாக்கூர், "தடுப்பூசி பெறாதவர்கள் பலரை இந்த தொற்று பாதிக்க உள்ளதால், அடுத்த சில வாரங்களில் தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கக்கூடும்." என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், ஆல்பர்ட்டா மாகாண மக்கள் தட்டம்மைக்கான தடுப்பூசி பெற்றுள்ளதை உறுதி செய்துகொள்ளுமாறு மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சமாளிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வரலாற்று ரீதியாக நட்பு நாடுகளான கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக பதட்டங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

கனடா மீது அமெரிக்கா வரிகளை விதித்ததன் மூலம் வர்த்தகப் போர் தொடங்கிய நிலையில், பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் வரிகளை விதித்தது.

அத்துடன், கனடியர்கள் அமெரிக்க தயாரிப்புகளைப் புறக்கணிக்கவும் செய்தனர்.

இந்தநிலையில், ஜனாதிபதி இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், மற்ற பெரிய எதிரிகளை விட கனடாவுடன் அவர் ஏன் கடுமையாக இருக்கிறார் என்பதற்கான பதிலை ட்ரம்ப் அளித்துள்ளார்.

அதில், தாம் எல்லா நாடுகளுடனும், மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்வதாகவும், ஆனால் சமாளிக்க மிகவும் மோசமான நாடுகளில் ஒன்று கனடா என ட்ரம்ப் பதிலளித்துள்ளார்.

அத்தோடு, கனடாவிற்கு ஆண்டுக்கு 200 பில்லியன் டொலர் மானியம் வழங்கி வருவதாகவும், இதனால் கனடா 51 ஆவது மாகாணமாக இருக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.



நடந்து வரும் வர்த்தகப் போரைத் தவிர, ட்ரம்ப் கனடாவை தங்களது 51 ஆவது மாகாணம் என்று தொடர்ந்து குறிப்பிட்டு வருவருவதுடன் கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை, ஆளுநர் ட்ரூடோ என்றும் அடையாளப்படுத்தி வந்தார்.

அவர்களுடைய மரக்கட்டைகள், மின்சாரம் எதுவும் அமெரிக்காவுக்குத் தேவையில்லை என்பதுடன் அவர்களுடைய வாகனங்கள் அமெரிக்காவுக்கு நிச்சயமாகத் தேவையில்லை என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மிக சமீபத்தில் கனடாவின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள மார்க் கார்னி, ட்ரம்புக்கு எதிராக துணிந்து செயல்படுவோம் என உறுதி அளித்திருந்தார்.



# புதிய ரேடார் அமைப்பை உருவாக்க கனடா தீர்மானம்

கனடா மற்றும் அவுஸ்திரேலியா இணைந்து ஆர்க்டிக் பகுதியில் புதிய இராணுவ ரேடார் அமைப்பை உருவாக்க உள்ளதாக கனடாவின் பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இது குறித்து நுணாவுட், இகலுயுட் நகரில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கார்னி பேசினார்.

“கனடாவின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கூட்டாளியான அவுஸ்திரேலியாவுடன் இணைந்து நீண்ட தூர over-the-horizon ரேடார் அமைப்பை உருவாக்க உள்ளோம்.

இது 6 பில்லியன் டொலர் மதிப்புடைய முதலீடு. இதன் மூலம் ஆர்க்டிக் பகுதிகளில் காற்று மற்றும் கடல் மூலம் வரும் அச்சுறுத்தல்களை விரைவாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கலாம்.” என தெரிவித்தார்.

இது அமெரிக்க - கனடா பாதுகாப்பு அமைப்பான NORAD-ஐ கூடுதல் வலுவாக்கும் என்றும் கனடாவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

ஆர்க்டிக் பகுதிக்கு அமெரிக்கா, ரஷ்யா, சீனா, கனடா உள்ளிட்ட 8 நாடுகள் உரிமை கோருகின்றன. ரஷ்யா மற்றும் சீனா இணைந்து செயற்படுவதில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் கவலை தெரிவித் துள்ளது.

2023, 2022 இல் அலாஸ்கா அருகே ரஷ்யா மற்றும் சீனாவின் போர் விமானங்கள் மற்றும் கப்பல்கள் ஒருங்கிணைந்து இயங்கியது அமெரிக்க கவனத்தை ஈர்த்தது.

டொனால்ட் ட்ரம்ப் Greenland மீது கட்டுப்பாடு செலுத்த விரும்புவதாக கூறியதையும், டென்மார்க் ஆர்க்டிக் பாதுகாப்புக்காக 2.05 பில்லியன் டொலர் ஒதுக்கியதையும் கார்னி சுட்டிக்காட்டினார். கனடா 420 மில்லியன் டொலர் செலவில் ஆர்க்டிக் பகுதியில் ஆண்டு முழுவதும் இராணுவச் செயல்பாடு களை மேம்படுத்தவும் திட்டமிட் டுள்ளது. நாட்டின் இறையாண்மையை உறுதிப்படுத்தவும், எதிரிகளை கட்டுப் படுத்தவும் இது உதவும் என கார்னி தெரிவித்துள்ளார்.

